சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.113/2023</u>

25.03.2026

வா.சா. 2 திரு.செந்தில்குமார், த/பெ. கலியபெருமாள்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நிரூபணவாக்குமூலத்தில் வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றும் எனக்கு எவ்வளவு காலமாக வாதி பழக்கம் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வாதியிடம் அவசர நிமித்தமாக கடன் வாங்கியதாகவும் முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியின் கணவர் பெயர் ஜீவா என்றால் சரிதான். அவரின் மாமனார் பெயர் சச்சிதானந்தம் என்றால் சரிதான். வாதி, அவருடைய கணவர் ஜீவா, சச்சிதானந்தம் ஆகியோர் புத்தகளூர் பிள்ளையார் கோவில்தெருவில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.புத்தகளூர் கிராமத்தில் அதிக நபர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். முதல்விசாரணையில் 09.09.2020 அன்று நான் எந்த நேரத்தில் வாதி வீட்டிற்கு சென்றேன் என்றும் எந்த நேரத்தில் வாதி, பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துதான் நான் கடனுறுதிசீட்டிலும் நான் சாட்சியாக கையொப்பம் போட்டபோதும் போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் நிரூபணவாக்குமூலத்தில் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. நிரூபணவாக்குமூலத்தில் ஆங்கிலத்தில் போட்டுள்ளேன். கடனுறுதிசீட்டில் தமிழில் போட்டுள்ளேன். கடனுறுதிசீட்டில் எனது கையெழுத்துக்கு பின்னிட்டு மகாதேவன் என்பவர் எழுதினார். கடனுறுதிசீட்டில் 1, 2 சாட்சிகள் என குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 1வது இடத்தில் நான் கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். 1வது சாட்சியாக யார் கையொப்பம் போட்டார் என்று அவரின் முகவரி எழுதப்படவில்லை என்றால் சரிதான். கடனுறுதிசீட்டில் ஸ்டாம்ப் மீது கைரேகை உள்ளது என்றாலும் அந்த கைரேகை யாருடையது என்றும் எழுதப்படவில்லை என்றால் மகேஸ்வரிதான் என் முன்னிலையில் வைத்தார். அந்த விவரத்தை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கடனுறுதிசீட்டில் உள்ள ஸ்டாம்பில் மகேஸ்வரி கையெழுத்து போடவில்லை

என்றால் ஸ்டாம்பிற்கு கீழே போட்டுள்ளார். நான் சொல்வது போல் வாதியிடம் பிரதிவாதி 09.09.2020 அன்று ரூ.2,00,000/- கடன் பெறவில்லை என்றாலும் அன்றைய தினம் கடனுறுதிசீட்டு எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வாதியிடம் நான் வேலை பார்த்துவருவதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதிசீட்டில் கண்ட மற்ற சாட்சிகள் புத்தகளூரை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரிதான்.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.